ET140763406IN

செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், 603 111

பிறப்பிப்பவர் - திருமதி. செ.கற்பகம்,

ப.மு.எண்.2616/அ1/2025,நாள். .04.2025.

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப் பணி - 15.03.2023 நிலவரப்படி பதிவறை எழுத்தர் பணியிலிருந்து இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு - செங்கல்பட்டு மாவட்டம், பெரும்பாக்கம், அரசு மேல்நிலைப் பள்ளி - இளநிலை உதவியாளர் **திருமதி.ப.ஷாயின்** என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் 30.01.2024 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்ந்து.

பார்வை:

1. அரசாணை எண். 151 பள்ளிக் கல்வி (பக 1(1)), நாள்.09.09.2022.
2. செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க.எண்.7713/அ1/2023, நாள்.29.01.2024.
3. சென்னை-6, பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.007745/அ2/இ3/2025, நாள்.27.03.2025.

-----

சென்னை-6, பள்ளிக் கல்வி இயக்கத்தில் 01.10.2024 முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் **திருமதி.ப.ஷாயின்** என்பாருக்கு பொது சார்நிலைப் பணியின் கீழ் உள்ள பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து அமைச்சு பணியின் கீழ் உள்ள இளநிலை உதவியாளர் பதவிக்கு 15.03.2023 நிலவரப்படி இளநிலை உதவியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டு பார்வை-2ல் காணும் செயல்முறைகளின்படி பெரும்பாக்கம், அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு 30.01.2024 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார்.

மேற்காண் பணியாளர் 15.03.2023 நிலவரப்படி பதிவறை எழுத்தர் பணியிலிருந்து இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு ஆணை பெற்றமையாலும், கல்விச் சான்றுகளின் உண்மைத் தன்மை அறியப்பட்டுள்ளதாலும், பார்வை 3-ல் காணும் செயல்முறைகள் வாயிலாக மேற்காண் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக் கோரி கருத்துரு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

சார்ந்த பணியாளருக்கு தற்போது அரசாணை எண். 151 பள்ளிக் கல்வி (பக 1(1)), நாள்.09.09.2022-ன்படி முதன்மைக் கல்வி அலுவலருக்கு நியமன அலுவலராக வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலும், கீழ்க்காணும் பணியாளருக்கு மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டிற்குள் தகுதிகாண் பருவத்தை முடிக்கவேண்டும் எனத் தெரிவித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 31(4)ல் தெரிவித்துள்ளவாறு ஐந்தாண்டுகளுக்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்காணும் அவரது பெயருக்கு எதிரே கலம் (5)-ல் உள்ளவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண். | முன்னுரிமைப் பட்டியல் வரிசை எண். | பெயர் / பதவி / தற்போது பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1. | 2 | திருமதி.ப.ஷாயின்,<br>இளநிலை உதவியாளர்,<br>பள்ளிக் கல்வி இயக்ககம்,<br>கல்லூரி சாலை, நுங்கம்பாக்கம்,<br>சென்னை – 6 | 30.01.2024<br>முற்பகல் | 30.01.2024 முற்பகல் |

மேற்காண் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட ஆணை மற்றும் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து பணிந்தனுப்பப்படுகிறது.

இணைப்பு –

பணிப்பதிவேடு அசல் (தொகுதி -3)

17/4/25

முதன்மைக் கல்வி அலுவலர்,

ம.தே செங்கல்பட்டு

21/04/2025

பெறுநர்

சம்பந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

நகல் பணிந்தனுப்பப்படுகிறது

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி),

பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை – 600 006.

- பணிவரன்முறை ஆணை மற்றும் அசல் பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலினை உடன் அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.